JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **18/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 2** | Prosecution /Defence / Court | |
| Name | பரமசிவம் | Village | சுள்ளிபாளையம்,<br>துடுப்பதி,<br>பெருந்துறை |
| Father's Name | பழனி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 04.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து கொண்டு நான் மதுரை வீரன் கோவிலில் பூசாரியாகவும் உள்ளேன். 2019 ம் வருடம், ஆங்கிலத்தில் 12 வது மாதம் தமிழ் மார்கழி மாதம், வெள்ளிக்கிழமை காலை 5.30 – 5.45 மணி இருக்கும். நான் கோவிலில் பூஜை செய்து கொண்டிருந்த போது அ.சா.1 சங்கீதா அழுது கொண்டு கோவிலுக்கு ஓடி வந்தது. எதிரி லோகநாதனை எனக்கு தெரியும். எதிரி லோகநாதன் எங்கள் ஊரைச் சேர்ந்த நபர் ஆவார். எனக்கு கண் சற்று மங்கலாகத் தான் தெரியும். சங்கீதா கோவிலுக்கு வந்தவுடன் அவர் முகத்தில் மிளகாய்ப் பொடி தூவி செயினை லோகநாதன் பறித்து சென்று விட்டதாக கூறியதால் சங்கீதாவை முகம் கழுவுமாறு கூறிவிட்டு பார்த்த போது அக்கம் பக்கம் இருந்தவர்கள் நிறைய பேர் வந்தார்கள். புளியமத்திற்கு அடியில் தான் இந்த சம்பவம் நடந்தது என்று அ.சா.1 சங்கீதா கூறினார் அங்கு சென்று பார்த்தோம். புளியமரத்திற்கு அடியிலேயே அவர் இருசக்கர வாகனத்தை போட்டு விட்டு ஓடி கோவிலுக்கு வந்திருந்தார். எதிரி

லோகநாதன் புளியமரத்தின் பக்கம் போய் தேடிய போது அங்கு இல்லை. பின்னர் அ.சா.1 சங்கீதாவை வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டோம். இந்த சம்பவம் சம்பந்தமாக பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** அ.சா.1 சங்கீதா எனக்கு உறவினர் என்றால் சரிதான். போலீசார் விசாரித்தால் சாட்சி சொல்லும் படி அ.சா.1 சங்கீதா சொன்னார் என்றால் சரிதான். அ.சா.1 சங்கீதா என்னென்ன நகை போட்டு இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கோயிலில் இருந்து புளியமரம் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 50 அடி தூரம் இருக்கும். சம்பவ இடத்திலிருந்து எந்த சத்தமும் எனக்கு கேட்கவில்லை என்றால் சரிதான். அங்கிருந்து வரும்போது அ.சா.1 தெளிவாகத் தான் வந்தார் என்றால் சரிதான். அ.சா.1 சங்கீதாவுக்கும் எதிரிக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது.

2. இருவரும் குடும்பத்திற்குள்ளும் ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. அ.சா.1 ம், எதிரியும் ஒரே இடத்தில் தான் வேலைக்கு சென்று வருகிறார்கள் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக வேலைக்கு சென்று வருகிறார்கள் என்றால் 2– 3 வருடங்கள். இதற்கு முன்பாக இதுபோன்ற பிரச்சனை வந்ததில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கும் அங்கு வேலை செய்யும் ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டது அதனால் தான் எதிரிக்கும் அ.சா.1 க் கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.போலீசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து விசாரித்தார்கள் சம்பவ இடத்தில் வைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

3. அ.சா.1 சங்கீதா வரும்போது செயினை கொண்டு வந்து போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்தார் என்றால் ஆமாம். எதிரிக்கும், அ.சா.1க் கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக புகார் கொடுத்துள்ளார் என்றும் சங்கீதா சொன்னதன் பேரில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை